செ.வெ.எண்: 63 / ஜனவரி / 2020 நாள்:23.01.2020

திருச்சிராப்பள்ளி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள கலையரங்கம் புதிய திருமண மண்டபத்தில் ஏழு ஊராட்சி ஒன்றியங்களை சேர்ந்த கிராம ஊராட்சி தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் ஆகியோர்களுக்கு நாளை(24.01.2020) உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாக திறன் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

-----------

தமிழ்நாடு ஊரக உள்ளாட்சித் தேர்தல் 2019-20ல் வெற்றி பெற்ற திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம், துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் சார்ந்த ஊராட்சிகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் ஆகியோருக்கு 24.01.2020 அன்று (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணிக்கு திருச்சிராப்பள்ளி, மத்திய பேருந்து நிலையம், அருகில் உள்ள கலையரங்கம் புதிய திருமண மண்டபத்தில் இரண்டாம் கட்ட Induction/Orientation ஒரு நாள் பயிற்சி நடைபெறவுள்ளது.

பயிற்சியின் நோக்கம்:

புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்களுக்கு, உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத் திறன் பற்றிய புரிதல், அரசியலமைப்பு விதிகள், கிராம ஊராட்சிகளின் அதிகாரங்கள், கடமைகள், அரசின் முக்கியமான திட்டங்கள், பற்றிய புரிதலை இந்த பயிற்சியின் மூலம் ஏற்படுத்தி கிராம ஊராட்சியின் நிர்வாக அதிகாரத்தை உரியவாறு செயல்படுத்திட வழிவகை ஏற்படுத்துவதற்காக இப்பயிற்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இலால்குடி, புள்ளம்பாடி, மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம், துறையூர் மற்றும் உப்பிலியபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் சார்ந்த ஊராட்சிகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் அனைவரும் மேற்படி பயிற்சியில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.